# கனடா-காரை கலாசார மன்றம்

## தமிழ்மொழித் திறன் போட்டி – 2022

### பேச்சு – மத்திய பிரிவு (3ஆம் 4ஆம் தர மாணவர்கள்)

# கல்வியே கண்

கல்வியை கல்விமான்கள் கண்களுக்கு ஒப்பிடுவார்கள். “எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.” இது எமக்கு ஔவை மூதாட்டி வழங்கிய பொன்மொழி ஆகும்.

திருவள்ளுவரும் கூட கற்றவர்கள் மட்டுமே கண் உடையவர்கள் என்று சொல்லியுள்ளார்.

கல்வி, அறிவை மட்டுமா ஊட்டுகின்றது? அழகைக் கூட்டுகின்றது; கண்ணில் ஒளியை ஏற்றுகிறது; மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழியைக் காட்டுகிறது; வறுமையை ஓட்டுகிறது; எங்களை எல்லாம் ஈடேற்றுகிறது.

கல்வி இன்றைய மனிதனை வானிலே பறக்க வைத்திருக்கிறது. ஆழ்கடலை அளக்க வைத்திருக்கிறது. எனவே நாமும் கல்வியை கண் எனக் காப்போம்;

கல்வியால் வளர்வோம்! கல்வியை வளர்ப்போம்!

நன்றி! வணக்கம்!!